**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– 2016–17 ஆம் நிதியாண்டு 10 மாவட்டங்களில் அரசு பொருட்காட்சி நடத்துதல்–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக தனி அரங்கம் அமைக்க அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.30 நாள்:28–03–2017

துன்முகி, பங்குனி 15,

திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(1D) எண்.15, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்11–02–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.3554/ புஇஅ/2016, நாள் 13.06.2016 மற்றும் 27.01.2017.

–––––––

**ஆணை:**

மேலே முதலாவதகாப் படிக்கப்பட்ட அரசாணையில்2015 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் நாகர்கோவில் ஆகிய பத்து மாவட்ட தலைமையிடங்களில் நடைபெறும் பொருட்காட்சியில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக, கலந்து கொள்ள அனுமதியும், மற்றும் தனி அரங்கம் அமைப்பதற்கென ஒரு மாவட்டத்திற்கு ரூ.66,000/– வீதம் ரூ.6,60,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், 2016–2017 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் கன்னியாகுமரி ஆகிய பத்து மாவட்ட தலைமையிடங்களில் நடைபெறும் பொருட்காட்சியில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக கலந்து கொள்ள அனுமதியும், மற்றும் தனி அரங்கம் அமைப்பதற்கென செலவினத் தொகையாக ஒரு மாவட்டத்திற்கு ரூ.66,000/– வீதம் பத்து மாவட்டங்களுக்கான செலவினத் தொகையாக மொத்தம் ரூ.6,60,000/– நிதி ஒதுக்கீடு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு அதனை ஏற்று, 2016–17 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் நாகர்கோவில் ஆகிய பத்து மாவட்ட தலைமையிடங்களில் நடைபெறும் பொருட்காட்சியில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக,

கலந்து கொள்ள அனுமதியும், மற்றும் தனி அரங்கம் அமைப்பதற்கென செலவினத் தொகையாக ஒரு மாவட்டத்திற்கு ரூ.66,000/– வீதம் ரூ.6,60,000/– (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.:-

"2235–சமூக பாதுகாப்பும் நலனும்–02. சமூக நலன் –001 நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது AF. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம்–08. விளம்பரமும் பிரச்சாரமும்–02. பொருட்காட்சி".
(து.தொ.கு. 2235 02 001 AF 0821)

5. 2016–2017 ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் போதிய நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.16164/நிதி(சந)/2017, நாள் 28.03.2017–ன் ஒத்திசைவுடனும் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர். (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர்கள் / சம்மந்தப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் ( மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை–2.

**நகல்:–**
நிதி (சந)/(வ.செ.பொ. II)த் துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.